# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

ரோஸ்லினா மேரி OSM, ரெஜினாமேரி FIHM, எப்ராசியாமேரி OSM, சாதனா OSM, இக்னேசியல்மேரி OSM, எதெல்பெர்காமேரி OSM , பொலன்ஷியா OSM – திருச்சி; அமிர்தராணி OSM, எமரென்ஸ்மேரி OSM, மிரியம் CIC, ஸ்டெல்லாரோஸ் CIC – திண்டுக்கல்; மேரி செசாரியா SSAM, ஜெசிந்த், கிளாடிஸ், வெண்ணிலா OSM. மேரி ராபர்ட்டா, லூர்துமேரி, ரால்ஃப், செசிலியா, நேசபாய், ரூபிமேரி OSM – சென்னை; செலின் SJC, சின்னராணி SJC - அணிலாடி; அல்போன்ஸ் - முகிலூர்; ரொமானா OSM, கரோலா மேரி OSM - தூத்துக்குடி; ஜெயமேரி CIC – ஆத்தூர்; அனன்சியா மேரி FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM , டான்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM , அல்போன்ஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM, டோனட்டெல்லா மேரி FIHM – கும்பகோணம்; அலினாமேரி OSM, மரிய விஜி OSM , குயின் லிபெட்ரா CIC – மதுரை; வித்யா மேரி OSM, சிரோன் OSM - நெல்லை , ரூபெல்லா OSM – இடிந்தகரை; ஆர்க்கேஞ்சல் மேரி OSM – கொடைக்கானல்; ஜெயா FSJ – மையனூர்; ஜூலி எலிசபெத் FBS, ஜூலியானா FBS – தஞ்சாவூர்; அக்யுலினா மேரி OSM – தூத்துக்குடி; செபஸ்தியம்மாள் FBS – கல்பட்டு; சகாயராணி SJC – கடலூர், லூர்துமேரி – ஆரம்பாக்கம், விமலி ஐசாக் - விரகாலூர், அருள்செல்வி – முட்டம், லில்லி தேவா – பெரியதச்சூர், மார்சலோஸா மேரி – பழையகாயல்

**பொதுநிலையினர்**

ஆனிபீட்டர் ராஜ், பிரான்சிஸ் பேசில், பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், மேரி மார்கரேட், கிளாரா லூர்து மேரி, ஜோசப் குழந்தை ராஜ், லீமா தெரஸ், சொர்ணம்மாள், செலின்மேரி, இமாக்குலேட் சோபியா – திருச்சி; லீலாவதி, அமல செல்வி, மார்கரேட் பெல்சியா, அல்போன்சா ஜோதிமேரி – திண்டுக்கல்; பிரேமா மோரிஸ், வியாகுலமேரி, திலகவதி, ஆண்டனி சிங்கராஜ் ஜோசப்;, மரிய வென்சி, லூசியாள், வியாகுலம் - சென்னை; வெர்ஜின் லூயிஸ் - திருநெல்வேலி; மரிய பிரகாசம் - தருமபுரி; மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு – கோவை; மரிய தெரசா – மயிலாடுதுரை. ஜெயராஜ், இமாகுலேட், - கோவளம், ஆண்டோ திவ்யன் - திருப்பத்தூர், சிப்ரியன் - தெளி, ஆரோக்கியம் - மதுரை

**பரிசு பெறுபவர்கள்**

ஜெயராஜ் - கோவளம்
SR. அருள்செல்வி – முட்டம்

**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**





பதிப்பாசிரியர் பக்கம்



# வாழ்க்கை

பணி. ராஜ்குமார் OSM

இறையேசுவில் பிரியமானவர்களே! ஓடும் வரை ஓட்டம், ஆடும் வரை ஆட்டம், வாழும் வரை வாழ்க்கை. அதுவும் அந்த வாழ்க்கை ஒரே ஒரு முறைதான். அதை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க தேவையில்லை. அதை மாற்றிக் கொள்ளவும் யோசிக்கத் தேவையில்லை. ஆனால் இச்சமூகத்தில் பல நேரங்களில் நாம் அடுத்தவரின் பேச்சுக்கும் ஏச்சிக்கும் பயந்து நம் வாழ்க்கையை நாம் வாழ்வதே இல்லை. சிறுவயதில் பெற்றோரின் வார்த்தை, வளர்ந்தபின் நண்பர்களின் வார்த்தை, திருமணத்திற்கு பின் வாழ்க்கை துணையின் வார்த்தை, வாழும்போது சமூகத்தின் வார்த்தை, வாழ்ந்து முடித்த பின் பிள்ளைகளின் வார்த்தை என அடுத்தவரின் வார்த்தைக்கு பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படியே போனால் நம் வாழ்க்கையை நாம் வாழ்வது எப்போது? இது என்னுடைய வாழ்க்கை! நான்தான் முடிவு எடுக்க வேண்டும்!

## உள்ளே...

அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 05
தூய ஜெபமாலை அன்னை - 08
பாப்பாவுக்கு பாட்டு...... - 13
திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் - 14
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியா - கடவுளின் கடிதம் - 26
என் வாழ்வில் மரியா - 29
விவிலிய வினாவிடை - 30
ஜீவமாதாவிடம் ஜீவன் வேண்டி - 32



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்றால் அது உங்களைப் படைத்து வழிநடத்தி வரும் கடவுளின் வார்த்தையை மட்டும் கேட்டு, வாழும் முறையை மாற்றிக் கொள்ளுங்கள். எவ்வாறெனில் அனுதினமும் திருப்பலியில் பங்கெடுப்பது, திருவிவிலியத்தை வாசிப்பது, குடும்ப ஜெபம் செய்வது, ஜெபமாலை செபிப்பது, நற்கருணை ஆராதனை செய்வது என பல வழிகளில் அவருடைய குரலை நம்மால் கேட்க முடியும். நம் இறைவனை விட சிறந்த வழியை வேறு யாரும் கூறிவிட முடியாது. அவரே வாழும் வார்த்தை! ஆதியிலிருந்து இப்போது வரை நம்மோடு பேசிக் கொண்டிருப்பவர் அவர் ஒருவரே.

ஆனால் அப்பேர்ப்பட்ட இறைமகனையே இந்த சமூகம் வார்த்தையால் குத்தி கிழித்தது. ஆனால் அவர் எள்ளளவும் அசைந்து கொடுக்கவுமில்லை, தன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளவுமில்லை. இதற்கு காரணம் அவர் இறைவனிடமிருந்து பெற்ற வலுவான சக்தியே. அந்த வலுவான சக்தி அவர் பெற்றுக் கொண்டது தன்னுடைய தனிப்பட்ட ஜெபத்தின் வழியாகத்தான். இறைவனோடு அவர் கொண்டிருந்த அபரிவிதமான அன்பும் நம்பிக்கையுமே அவருக்கு உறுதுணையாக இருந்தது. ஆகவேதான் இந்த சமூகம் கூறிய எந்த வார்த்தைக்கும் அவர் செவிமடுக்கவில்லை. நாம் அவருடைய பிள்ளைகள் என்றால் அவரைப் போல வாழ முயற்சிப்போம். அவர் காட்டிய வழியில் நாமும் செல்வோம். அதுவே நாம் கிறிஸ்தவர்கள் என்ற அடையாளத்தை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டும். அன்புக்கு உரியவர்களே வருகின்ற அக்டோபர் மாதம் ஜெபமாலை அன்னையின் திருவிழாவை கொண்டாட இருக்கின்றோம். இதோ இந்த நேரத்தில் நம் அன்னையின் வாழ்க்கை முறையையும் எடுத்துக்கொள்வோம். சிறுவயதிலேயே இந்த சமூகத்திற்கு பயந்து அவர் இறை திட்டத்திற்கு செவிமடுக்காமல் இருக்கவில்லை. மாறாக இந்த சமூகத்தின் வார்த்தைகளை துச்சமெனக் கருதி ஆண்டவரின் வார்த்தையை முழுவதுமாக உள்வாங்கி அவர் தன்னுடைய வாழ்க்கையை மாற்றிக் கொண்டு இறைத்திட்டத்தின்படி வாழ்ந்தார். இந்த சமூகம் பேசிய பேச்சுக்களுக்கும் ஏளனத்திற்கும் அவர் கொஞ்சம் கூட அசையவேயில்லை. அது போலவே நாமும் வாழும் வரை இந்த சமூகத்தை கண்டு பயப்படாமல் இறைவனுடைய வார்த்தை கேட்டு வாழ முயற்சிப்போம். அதற்கு நம்முடைய ஜெபமாலை அன்னை உதவியாக இருப்பார். அன்றாடம் இறைக்குரலைக் கேட்போம். கொரானா தொற்றிலிருந்து விடுப்பட அவரின் ஆசீரைக் கேட்போம்...

ஜெபம் செய்வோம் தினம் ஜெபமாலை சொல்வோம்........





*இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க! என் பெயர் டெய்சி ராணி. சாந்தோமில் இருந்து வருகிறேன். என் மூத்த மகளுக்கு திருமணமாகி ஏழு வருடங்கள் முடிந்தும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. குழந்தை பாக்கியத்திற்காக மருந்துகளை எடுத்துக்கொண்டாள். ஆனால் அது பயனளிக்கவில்லை. என் மகளுக்காக ஜீவமாதாவிடம் மன்றாடினோம். மாதாவிடம் வேண்டிய 40வது நாளில் அவள் கருத்தரித்தாள்... சில மாதத்தில் மருத்துவர்கள் அவளுக்கு கொடியில் பிரச்சினை உள்ளது என்று கூறினார்கள். ஜீவ மாதாவிடம் கண்ணீர் விட்டு என் மகள் வேண்டினார். மருத்துவர்கள் அதன்பின் குழந்தை கொடி சுற்றி உள்ளது என சொன்னார்கள். ஜீவ மாதா அருளால் குழந்தை ஆரோக்கியமாக பிறந்தது. மருத்துவர்கள் அதிக எடை எனக் கூறினர் ஆனால் குழந்தை 3.8 கிலோ இருந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி!*

*என் பெயர் ஜெரால்ட் ரேகா. எங்களுக்கு முதல் குழந்தை ஆரோக்கியமாக பிறந்தது. நாங்கள் கண்ணீர்விட்டு இரண்டாவது குழந்தை வேண்டும் என வேண்டினோம். எட்டரை வருடங்களுக்கு பிறகு ஜீவமாதா எங்களுக்கு ஒரு பெண் குழந்தையை கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி*

*என் பெயர் சவரியம்மாள். நான் அயனாவரத்தில் இருந்து வருகிறேன். என் தம்பி பெண்ணுக்கு 10 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. ஜீவமாதாவிடம் வேண்டியதால் அவள் கருத்தரித்தாள். ஆனால் அவளுக்கு குறை மாதத்தில் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவின் அருளால் தாயும் சேயும் நலமாக உள்ளனர். ஜீவ மாதாவுக்கு நன்றிகள் பல.*

அருட்்பணி. புதுமை சவரி ம.ஊ.ச.
சென்னை



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

கொரோனா தொற்றுகாலமாக இருந்தபோதிலும், அரசின் வழிகாட்டுதல்களுக்கேற்ப ஜீவமாதா நவநாள் ஆரம்பித்து பனிரெண்டாம் ஆண்டு விழாவை பக்தர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள். குழந்தை வரம் வேண்டி பக்தியோடு பலரும் அன்னையின் திருவுருவம் தாங்கிய திருத்தேரின் முன் செபமாலை செபித்தனர். அன்றைய தினம் பலர் வந்து சாட்சியங்களைப் பகிர்ந்துகொண்டார்கள். இவர்களது சாட்சியப்பகிர்வு கேட்கின்ற அனைவரையும் நெகிழவும் மெய்சிலிர்க்கவும் வைத்தது. அந்த சாட்சியங்களில் ஒருசில இதோ உங்கள் பார்வைக்கு

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க! என் பெயர் ப்ரீத்தி. நான் ராயபுரத்தில் இருந்து வருகிறேன். என் கணவருக்கு திடீரென 4-5 நாட்களாக பேச்சு வரவில்லை. நான் கவலையோடு ஜீவ மாதாவிடம் மன்றாடினேன். அன்னை என் கணவருக்கு பூரண சுகம் அளித்தார். மறுநாளே என் கணவர் தெளிவாக பேசத்தொடங்கினார். ஜீவ மாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்!

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க! என் பெயர் ஆரோக்கியமேரி. நான் கே.கே நகரில் இருந்து வருகிறேன். நான் இந்து சமயத்தைச் சார்ந்தவள். என் அம்மா நான் பிறந்த பத்து நாளில் இறந்து விட்டார். என்னை ஒரு இந்து சகோதரி வளர்த்தார். எனது திருமணம் வேளாங்கண்ணி ஆலயத்தில் நடந்தது. அன்று முதல் என் வாழ்க்கை மாறியது. அன்னைக்கு நன்றிகள்...

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க! என் பெயர் சுப்ரியானா. நான் குன்றத்தூரில் இருந்து வருகிறேன் எனக்கு திருமணமாகி 2 ஆண்டுகளாக குழந்தை இல்லை. நான் ஜீவ மாதாவிடம் வேண்டினேன். மூன்று மாதம் கழித்து மாதாவின் அருளால் நான் கருவுற்றேன். எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!







# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 34

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச.,,
நவதுறவியர் இல்லம் - மாமல்லபுரம்.

## ஏழு துயரங்களின் துயருறும் அன்னை மரியா திருத்தலம் சஸ்டின், சுலோவாகியா

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 34வது வெளிநாட்டு திருத்தூதுரை பயணத்தை கடந்த மாதம், அதாவது செப்டம்பர் 12ம் தேதி முதல் 15ஆம் தேதி வரை ஹங்கேரி மற்றும் சுலோவாகியா நாடுகளில் மேற்கொண்டார். தனது திருப்பயணத்தின் இறுதி நிகழ்வாக, துயருறும் அன்னை மரியாவின் விழாவான செப்டம்பர் 15ஆம் தேதி சுலோவாகிய நாட்டில், சஸ்டின் நகரில் அமைந்துள்ள ஏழு துயரங்களின் துயருறும் அன்னை மரியாவின் திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டார். அத்திருத்தலத்தில் விழா திருப்பலியை நிறைவேற்றினார். துயருறும் அன்னை மரியா சுலோவாகிய நாட்டின் பாதுகாவலியாவார்.

திருத்தந்தையின் இத்திருத்தூதுரைப் பயணத்தின் திருப்பயணத்தில் அவரோடு இணைந்து பயணிப்போம். தமிழக வியாகுல அன்னை திருத்தலங்களிலிருந்து, ஏறக்குறைய 450 ஆண்டுகள் பழமையான இத்திருத்தலத்தை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கடந்த 450 ஆண்டுகளாக துயருறும் அன்னை மரியாவின் இத்திருத்தலத்தை நோக்கி பல்லாயிரக்கணக்கான திருப்பயணிகள் திருப்பயணமாக சென்று கொண்டிருக்கிறார்கள். தங்கள் சுமைகளை அன்னையின் திருவடிகளில் இறக்கி வைத்து, அன்னையின் பரிந்துரை வழியாக ஆண்டவர் இயேசுவின் ஆசீர்வாதத்தையும், அரவணைப்பையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.



இத்தகைய பழமையான திருத்தலத்திற்கு ஒரு வரலாறு உண்டு. 13ஆம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ அரசர்களால் ஆளப்பட்ட ஐரோப்பா 14ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய பேரரசான ஓட்டமான்களால் பெரும் சண்டைகளை நேர்கொண்டது. ஓட்டமான்கள் ஐரோப்பாவின் மீது தொடுத்த போர் பெரும் பகுதிகளில் கலக்கத்தை உருவாக்கியது. இச்சூழமைவில் கி.பி 1564ஆம் ஆண்டுகளில் சுலோவாகிய பிரபுக்கள் ஓட்டமான்களுக்கு அஞ்சி காடுகளில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களில் ஒருவரான பிரபு ஹம்ரேசு சீபோர் தனது மனைவி ஆஞ்சலினா பசீசுடன் சஸ்டின் நகரை ஒட்டிய காடுகளில் தஞ்சம் புகுந்தார். பிரபுவாக இருந்தாலும் ஹம்ரேசு தனது மனைவிக்கு உரிய மரியாதை



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

தராமல், அவரை துன்புறுத்தி வந்தார். ஒரு நாள் காட்டுப் பாதையில் கோச் வண்டியில் சென்று கொண்டிருக்கும் போது அவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒரு வாக்குவாதத்தில் கோபமடைந்த பிரபு ஆஞ்சலினாவை வண்டியிலிருந்து கீழே தள்ளிவிட்டு சென்று விட்டார்.

அடர்ந்த வனப்பகுதியில் யாருமில்லா அனாதைபோல் தவித்து நின்ற ஆஞ்சலினா, கண்ணீர் மல்க துயருறும் அன்னை மரியாவிடம் தனது கணவர் மனம்மாற வேண்டும் எனவும், தங்களது குடும்ப வாழ்வு சிறக்கவும் வேண்டுமென மன்றாடினார். தன்னுடைய கணவர் தன்னை ஏற்றுக் கொண்டால் துயருறும் அன்னை மரியாவிற்கு மரத்தாலான ஒரு சுரூபத்தை நிர்மாணிப்பதாகவும் வாக்களித்தார்.



தன் துயரங்களின் வழியாக நம்மை மீட்பரை நோக்கி வழி நடத்தும் அன்னை, துயரங்களின் உச்சக்கட்டத்தில் தம்மை நோக்கி குரலெழுப்புவோரின் அபயக்குரலுக்கு செவிமடுக்காமலிருப்பாரோ! அன்னையின் கருணையால் ஆஞ்சலினாவின் அபயக்குரலுக்கு உடனடியாக பலனும் கிடைத்தது. பிரபு ஹம்ரேசு மனம் மாறியவராக திரும்ப வந்து தன் மனைவியை முழுமனத்தோடு ஏற்றுக் கொண்டார். அன்னையின் அரவணைப்பை இருவரும் முழுமையாக உணர்ந்தனர். தன் செபம் கேட்கப்பட்டதற்கு நன்றியாக மரத்தாலான துயருறும் அன்னை மரியாவின் சுரூபத்தை செய்து தான் வண்டியிலிருந்து தள்ளிவிடப்பட்ட இடத்தில் நிறுவினார் ஆஞ்சலிக்கா.

பிரபுவின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தையும், மகிழ்ச்சியாக அவர்கள் வாழும் குடும்ப வாழ்வையும் அறிந்த பலர், அதற்கான காரணத்தையும் கேட்டறிந்தனர். துன்பங்கள் மத்தியில் நம்மை கைவிடாமல், பரிந்து பேசுபவராக இருக்கும் அன்னையின் திருச்சுரூபம் வனப்பகுதியில் நிறுவப்பட்டிருப்பதை அறிந்த பலர், அன்னையை நோக்கி பயணித்தனர். தங்கள் துன்பங்களையும், வேண்டுதல்களையும் அன்னையிடம் எடுத்துரைத்து மன்றாடினர். எண்ணற்ற புதுமைகள் நடைபெறலாயின. துயருறும் அன்னையின் பரிந்துரை வழியாக நடைபெறும் புதுமைகளை அறிந்த திருத்தந்தை 12ஆம் கிளமெண்ட், அப்புதுமைகள் பற்றி ஆய்வு செய்ய பணித்தார். ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவினர், அனைத்தையும் ஆய்வு செய்து அப்புதுமைகள் பற்றிய உண்மைத் தன்மையை கி.பி. 1732ஆம் ஆண்டு திருத்தந்தையிடம் எடுத்துரைத்தனர்.



புதுமை விளங்கும் துயருறும் அன்னையின் திருச்சுரூபத்தை, திருத்தந்தை அவர்கள் கி.பி. 1733ஆம் ஆண்டு புனித பவுல் துறவற சபையினரின் பராமரிப்பில் ஒப்படைத்தார். கி.பி. 1736ஆம் ஆண்டு புனித பவுல் சபையினர் அவ்விடத்தில் திருப்பயண ஆலயம், துறவற இல்லம் ஆகியவற்றை நிர்மாணிக்க ஆரம்பித்தனர். ஆண்டுகள் பல கடந்து கி.பி. 1762ஆம் ஆண்டு பேரரசி மரிய தெரேசா மற்றும் அவர் கணவர் பிரான்சிஸ் ஸ்டீபன் அவர்கள் முன்னிலையில்





13) பலியை அவர்கள் விரும்புகின்றார்கள்: பலி கொடுத்து, அந்த இறைச்சியையும் உண்ணுகிறார்கள்: அவற்றின்மேல் ஆண்டவர் விருப்பங்கொள்கிறார். வசனம் சரியா தவறா? :

14) நானே அவர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் புயங்களை வலிமையுறச் செய்திருந்தும் எனக்கு எதிராகத் தீங்கு நினைக்கின்றார்கள். இது எந்த அதிகாரம் எந்த வசனம்.?

15) நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன். அவன் ............. மலருவான். லெபனோனின் .............. வேரூன்றி நிற்பான்.

16) எப்ராயிமின் தீச்செயல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது அவனுடைய பாவம் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது வசனத்தை சரியாக எழுதவும்

17) அப்போது, ஆண்டவர் ஓசேயாவைப் பார்த்து, “இவனுக்கு லோ அம்மீ” எனப் பெயரிடு என்றார் லோ அம்மி அதன் அர்த்தம் என்ன?

18) அம்மீ என உங்கள் சகோதரர்களிடம் கூறுங்கள். “ருகாமா” என உங்கள் சகோதரிகளிடம் கூறுங்கள். இதில் அம்மீ, ருகாமா இதன் பொருள் என்ன?

19) யாக்கோபு ஆராம் நாட்டிற்குத் தப்பி ஓடினான்: இஸ்ரயேல் ஒரு பெண்ணுக்காக ஊழியம் செய்தான்: அப்பெண்ணுக்காக ஆடு மேய்த்தான். வசனம் சரியா தவறா?

20) ................நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? ....................... உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்?

**சென்ற மாதத்தின் விடைகள்: தானியேல்.**

**1.** 1:7 **2.** 2:21; **3.** 12:3; **4.** 11:35; **5.** 10:19; **6.** 5:25 **7.** 3:1; **8.** 4:35; **9.** 9:10; **10.** 6:1; **11.** 7:14; **12.** 1:9; **13.** 2:48; **14.** 12:2; **15.** 10:1; **16.** 9:5; **17.** 7:27; **18.** 6:16; **19.** 5:5; **20.** 4:2.

.

**அன்பார்ந்தவர்களே! தயவுசெய்து உங்கள் விடைத்தாள்களோடு முழு முகவரியையும் முடிந்தால் உங்களது அலைபேசியையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.**

விடைகள் அனுப்ப இறுதி நாள் 23-10-2021

முகவரி

**The Editor**
**Appadiye Agattum**
**5/301, Matha Koil Street**
**Rajiv Gandhi Road**
**Okkiampet, Chennai - 97**



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!



ஓசாயா
அக்டோபர் 2021

# விவிலிய வினா விடை

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) ஞானம் நிறைந்தவன் எவனோ, அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும்: பகுத்தறிவு உள்ளவன் எவனோ, அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும்: ஆண்டவரின் நெறிகள் நேர்மையானவை: நேர்மையானவர்கள் அவற்றைப் பின்பற்றி நடக்கிறார்கள்: மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகின்றார்கள். இது எந்த அதிகாரம் எந்த வசனம்.

2) வறண்ட நிலமாகிய பாலைவெளியில் உன்னை அறிந்து ஆதரித்தவர் நானே: யார்?

3) நீ போய் விலைமகள் ஒருத்தியைச் சேர்த்துக்கொள்: வேசிப் பிள்ளைகளைப் பெற்றெடு: ஏனெனில் நாடு ஆண்டவரை விட்டு விலகி வேசித்தனத்தில் மூழ்கியுள்ளது என்றார். இது யார் வழியாக ஆண்டவர் பேசியது?

4) அந்நாளில், என் ............... என என்னை அவள் அழைப்பாள்: என் ............. என இனிமேல் என்னிடம் சொல்லமாட்டாள் என்கிறார் ஆண்டவர்

5) யாக்கோபு தன் தாயின் வயிற்றிலேயே தமையனை முந்திக் கொண்டானா?

6) பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன்: அவர்கள் கழுத்தின்மேல் இருந்த நுகத்தை அகற்றினேன்: அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன். இது எந்த அதிகாரம் எந்த வசனம்?

7) பல நாள்கள் அரசனின்றி, தலைவனின்றி, பலியின்றி, பலி பீடமின்றி, குருத்துவ உடையின்றி, குல தெய்வச் சிலைகளுமின்றி இருப்பார்கள், யார்?

8) மதுவும், திராட்சை இரசமும் எதைக் கெடுக்கும்.?

9) வீண் வார்த்தைகளையே அவர்கள் பேசுகின்றார்கள். பொய்யாணை இட்டு உடன்படிக்கை செய்கின்றார்கள்: ஆதலால், வயலின் உழவுச் சால்களில் முளைக்கும் நச்சுப் பூண்டுகள்போல என்ன முழைக்கும்?

10) தண்டனைத் தீர்ப்புப் பெறும் ............ வந்துவிட்டன: பதிலடி கிடைக்கும்.................. வந்துவிட்டன: இதை இஸ்ரயேலர் அறிந்துகொள்வர்.

11) அவர்களுடைய கடவுளிடம் திரும்பிவர அவர்களின் செயல்கள் விடுவதில்லை: ஏன்?,

12) எப்ராயிமே! உன்னை நான் என்ன செய்வேன்? யூதாவே! உன்னை நான் என்ன செய்வேன்? உங்கள் அன்பு எதைப் போல் மறைந்து போகிறது?





ஆலய நேர்ந்தளிப்பு நடைபெற்றது. இவ்வாலயமானது 64 மீட்டர் நீளமும், 23 மீட்டர் அகலமும் கொண்டு 6 சிறிய பீடங்களுடன் அமைக்கப்பட்டது. ஆலய அர்ச்சிப்பிற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு அன்னையின் திருச்சுரூபமானது பளிங்கு மேடையின் மீது வைத்து அர்ச்சிக்கப்பட்டது.

கி.பி. 1786ஆம் ஆண்டு பேரரசர் யோசேப்பின் கட்டளையினால் புனித பவுல் சபையானது சுலோவாகிய நாட்டில் மூடப்பட்டது. அவர்கள் போலந்து நாட்டிற்குச் சென்று தங்கள் பணிகளைச் செய்தனர். இத்திருத்தலமானது மறைமாவட்ட குருக்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. கி.பி 1924ஆம் ஆண்டு முதல் சலேசிய துறவற சபையின் பராமரிப்பில் இத்திருத்தலம் உள்ளது. கி.பி. 1927ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் துயருறும் வியாகுல அன்னையை சுலோவாகியா நாட்டின் பாதுகாவலராக அறிவித்தார். கி.பி. 1964ஆம் ஆண்டு புனித திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் இத்திருத்தலத்தை மைனர் பசிலிக்காவாக அறிவித்தார்.

கம்யூனிச சித்தாந்தங்களின் பிடியிலிருந்த சுலோவாகியா விடுதலை அடைந்த பிறகு மக்களின் ஆன்மீக வாழ்விலும், நாட்டின் அடித்தளமாக இருந்த மத உணர்வுகளிலும் எழுச்சி ஏற்பட்டது. ஏழு துயரங்களின் துயருறும் அன்னை மரியாவின் திருநாளான செப்டம்பர் 15ஆம் தேதி தேசிய விடுமுறையாக கி.பி. 1993ல் அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் திருத்தலத்தில் கொண்டாடப்படும் திருப்பலியில் அரசு தலைவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கானவர் கலந்து கொண்டு சுலோவாகிய நாட்டிற்கு அன்னையின் பரிந்துரையால் ஆண்டவர் செய்து வரும் நன்மைகளுக்கு நன்றி கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அத்துடன் அந்நாளானது, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் திருப்பயண நாளாகவும் அமைந்துள்ளது. வயது முதிர்வினாலும், மாற்றுத் திறன்களினாலும் தங்களது வாழ்வில் அனுபவிக்கிற துன்பங்களை அன்னையின் துன்பங்களோடு இணைத்து ஆண்டவரின் சிலுவையடியில் ஒப்படைத்து அன்னையின் அரவணைப்பில் ஆறுதல் பெறுகின்றனர்.



கி.பி. 1995ஆம் ஆண்டு புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இத்திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டார். அவ்வமயம் திருத்தந்தை அவர்கள் துயருறும் அன்னை மரியாவிற்கு தங்க கிரீடம் சூட்டி மரியாதை செலுத்தினார். கி.பி. 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்ட பொழுது, இத்திருத்தலத்திற்கு தங்கத்திலான ரோஜா செடியை காணிக்கையாக வழங்கினார்.

**திருப்பயணம் தொடரும்....**



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

# தூய ஜெபமாலை அன்னை

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச., சேர்வைட் கான்வன்ட், பணகுடி

**தொடக்கவுரை**

"விண்ணெழுந்து செல்லும் இந்த ஜெப பாட்டு
அன்னை உள்ளம் தட்டும் இந்த மன்றாட்டு"

என்ற பாடலின் வரிகள் ஜெபமாலை சக்திவாய்ந்த ஒரு ஜெபமாக இருப்பதை உணர்த்துகிறது. அன்னை மரியாவிடமும் இயேசுவிடமும் நம்மை இணைக்கும் இந்த அற்புதமான ஜெபமாலை சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லா நிலைகளிலும் ஜெபிக்கப் படுகிறது. அனைவரும் இதை உணர்ந்து ஜெபிக்க அறிய விரும்புகிறார்கள். ஜெபமாலை அவர் மகன் இயேசுவோடு நம்மை இணைக்கிறது. அன்னையோடு இணைந்து ஜெபிக்க, ஜெபங்களை அவர் தம் மகன் ஏற்று நிறைவேற்றுவார் எனும் நம்பிக்கையில் ஜெபமாலை ஜெபிக்கிறோம். இந்த அழகிய ஜெபமாலையின் மணிகளை நகர்த்தும்போது மரியாவோடு சேர்ந்து இயேசுவின் குழந்தைப் பருவத்தில் அவரது பாஸ்கா விழா மற்றும் தூய ஆவியின் பொழிவு ஆகிய அனைத்து நிகழ்வுகளையும் மீண்டும் திரும்பிப் பார்த்து அவற்றில் வாழ்வது போன்று அனைவரும் மகிழ்கிறோம். ஜெபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட அக்டோபர் மாதத்தில் அவர் நம்மிடம் ஜெபிக்க கேட்டுக்கொண்ட ஜெபமாலை உணர்த்தும் சில உண்மைகளை தியானிப்போம். தூய ஜெபமாலை அன்னையின் திருவிழாவாக அக்டோபர் 7ஆம் தேதி இன்றும் சிறப்பாக உலகம் முழுவதும் பல வகையான நோய்கள் தீமைகள் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி அமைதியும் சமாதானமும் இன்றி தவிக்கும் உள்ளங்கள் நாடுகளுக்காக உருக்கமுடன் ஜெபமாலை என்னும் வாடாத மாலையை ஜெபிப்போம்

**ஜெபமாலையின் வரலாறு**

ஜெபமாலை ஜெபிப்பதில் ஒரு பரிணாம வளர்ச்சி இருப்பதை காணமுடிகிறது. நான்கு வகையான கருத்துகள் நிலவுகின்றன. ஒன்று: தொடக்ககால துறவற மடங்களில் துறவியர் இறந்த துறவிக்காக 150 திருப்பாடல்கள் ஜெபிக்கும் பழக்கத்தைப் பின்பற்றினர். வாசிக்கத் தெரியாத துறவியர் ஐம்பது முறை 'விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே' என்று இறைவேண்டல் ஜெபித்தனர். இதை தொடர்ந்து கபிரியேல் தூதர் மரியாளுக்கு கூறிய வாழ்த்தையும், எலிசபெத்து மரியாவுக்கு கூறிய வாழ்த்தையும் இணைத்து ஒரு ஜெபம் உருவாக்கப்பட்டது. அதன் இரண்டாம் பகுதியாக, ஒரு சில விண்ணப்பங்கள் இணைக்கப்பட்டு 'அருள் நிறைந்த மரியே' என்ற ஜெபம் வடிவம் பெற்றது. இதனால் துறவியர்





# என் வாழ்வில் மரியா

சகோ. அகஸ்டின் ஜியோ இக்னேஷியஸ், பெங்களூர்

அருளின் ஊற்றாம் ஆண்டவனின் தாயே
இனிய உன் பாசம் ஈந்தாயே
உவகை மனதில் நிறைய
ஊற்றாய்ப் பெருக்கெடுக்கும் உம் அன்பு

எளிமையின் வடிவானாய் இம்மண்ணில்
ஏற்றேனே என் தாயாய் உம்மை
ஐயம் தவிர்த்து நீ "ஆம்" என்றாய் - அது
ஓவியமாய் நிற்கிறதே என் மனதில்

ஔடதம் தேவையில்லை அம்மா
உம் பரிந்துரை ஒன்றே போதும்
அஃறிணைகளும் மகிழ்ந்து பாடும்
அம்மா உந்தன் புகழையே

வேதனைகள் வாழ்வில் வாட்டும்போது
வேண்டினேன் உமது பரிந்துரையை
வேரறுத்தாயே என் துன்பத்தை
வேந்தனாம் உம் திருமகனின் அருளால்

அம்மா என் அம்மா
வான் மட்டும் பாடுவேன் உன் புகழை
எனக்காகப் பாடுகள் பட்ட என் தேவனோடு
ஏற்றாயே உமது வியாகுலத்தை

வியாகுலம் பல உண்டு என் வாழ்வில்
இருப்பினும் வழி நடந்தேன் உன் பாதையில்
ஆறுதலளிக்கும் தேவன் நின் தனயனாய்
அருகில் இருக்கிறார் என் தமையனாய்



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

கொண்டாட்டங்களும் மரியாவுக்கு உரியவையாக மறுஉரு எடுத்தன.

இந்நிலையில் இத்தகைய தாய் தெய்வங்களைப்பற்றி மக்கள் கொண்டிருந்த பல கருத்துக்களும் உணர்ச்சிகளும் வணக்க முறைகளும் மரியாவுக்கு உரியவையாக நிறைய மக்களின் மனதிலும் நடைமுறையிலும் திசைமாற்றம் அடைந்தது வியப்பில்லை. இதன் விளைவாக சாதாரண மக்கள் பலரது சமய கண்ணோட்டத்தில் விவிலியம் காட்டும் நாசரேத்தூர் ஏழைப் பெண் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டு மறைக்கப்பட்டு உலகம் வணங்கும் தெய்வத்தாயாக மரியா மாற்றம் பெறுகிறார். ஏழை மக்களின் சமயமாக இருந்த கிறிஸ்தவம் எவ்வாறு உரோமை பேரரசின் ஆட்சி மதமாக மாறி அடிமட்டத்து மக்களின் வாழ்க்கை பிரச்சனைகளிலிருந்து விலகியதோ அவ்வாறே இம்மண்ணக வாழ்விற்கு மாதிரியாக எடுத்துக்காட்டாக (Model) இருந்த மரியா, விண்ணக வாழ்வின் அரசியாகவும், மாட்சிமையாலும் மகிமையாலும் உயர்த்தப்பட்டு, மக்களிடம் இருந்து விலகிய மரியாவாக மக்கள் மனதில் இடம் பிடிக்கின்றார்.

ஆனால் இதற்கு மாறாக இரண்டு முதல் ஆறு நூற்றாண்டுகள் வரை இறை இயல் (Theology) ஆசிரியர்களின் பார்வையில் கிறிஸ்து இயலும் (Christology), மரியியலும் (Mariology) திருஅவை இயலும் (Ecclesiology) ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டு, பல தப்பறைக் கொள்கைகளுக்கு எதிராக மரியா முன்னிருத்தப்படுகின்றார். அக்கால இறையியலின்படி மரியா அந்நியமாக்கப்படவோ அல்லது விலக்கப்படவோ இல்லை. மாறாக கிறிஸ்துவையும் திருஅவையையும் இணைக்கின்ற பாலமாக செயல்பட்டார் என்பது தெளிவாகின்றது. கி.பி. 431 ல் நடந்த எபேசு நகர் பொதுச்சங்கம் மரியாவை ‘இறைவனின் தாய்’ என்று நம்பிக்கை அறிக்கையிட்டபோதும், மரியாவை ஒரு பெண் – தாய் தெய்வமாக அறிவிக்கவில்லை. மாறாக நெஸ்டோரியசு என்பவரின் தவறான போதனையைக் கண்டித்து இயேசுவின் இறைத்தன்மையையும் மனிதத்தன்மையையும் ஒரே ஆளுமையை நிலைநாட்டும் வகையில்தான் இறைவனின் தாய் என்ற பட்டத்தை மரியா பெறுகின்றார். உண்மையில் இது மரியாவைப்பற்றிய நம்பிக்கை உண்மை அல்ல. மாறாக இயேசுவைப்பற்றிய நம்பிக்கை உண்மை. மரியாவிடமிருந்து பிறந்த இயேசு கிறிஸ்து உண்மையில் இறைமகன் என்ற நம்பிக்கை உண்மையை நிலைநாட்டவே மரியா ‘இறைவனின் தாய்’ என்ற பட்டத்தை பெறுகின்றார். இறையியலின்படி மரியா சரியாக புரிந்துகொள்ளப்பட்டார். ஆனால் பாமர மக்கள் மற்றும் பெண் தெய்வங்களை வணங்கி அன்று கிறிஸ்தவர்களாக மாறிய உரோமை மக்களின் மனதில், எண்ணத்தில் மரியா வேறொரு பரிமாணத்தை எடுக்கின்றார் என்பதும் உண்மை. மரியா இறைவனின் தாய் என்றால் ஏனைய பெண் – தாய் தெய்வங்களைப் போல மரியாவும் ஒரு தாய் தெய்வமே என்ற எண்ணமும் உணர்வும் சாதாரண மக்கள் பெரும்பான்மையோரது அடிமனதில் ஏற்பட்டதில் வியப்பில்லை. இதன் அடிப்படையில் சில பக்தி மிகைப்படுத்துதல்கள் தோன்றியதிலும் வியப்பில்லை.

அடுத்த இதழில் மரியா பக்தி உண்மை வணக்கமா அல்லது உணர்ச்சிகளுக்கு வடிகாலா? என்பதைப்பற்றி சிந்திப்போம்.





இதை ஒரு நாளில் 150 முறை சொல்ல ஆரம்பித்தனர். இரண்டு: 13ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் அல்பி ஜெனிசியா தப்பறையான கொள்கை பரவியது. இதன்படி நல்லவை அனைத்தும் கடவுளிடமிருந்தும், தீயவை அனைத்தும் அலகையிடமிருந்தும் வருகின்றன. ஆன்மா கடவுளிடமிருந்தும் உடல் அலகையிடமிருந்தும் வருகின்றது. ஆன்மா நல்லது உடல் தீயது. எனவே இறைவன் மனு உருவாதல் ஏற்புடையதலல என்ற கொள்கை வேகமாக பரவியது. இதை தடுத்து நிறுத்த புனித சாமிநாதரை திருத்தந்தை மூன்றாம் இன்னோசண்ட் கேட்டுக் கொண்டார். ஆனால் புனிதரின் முயற்சிகள் தோல்வியைத் தழுவின. மிக வருத்தத்துடன் இருக்கும் வேளையில் அன்னைமரியா தோன்றி ஜெபமாலை ஜெபிப்பது வழியாக மட்டுமே இந்த தவறான போதனையை முறியடிக்க முடியும் என்று உரைத்ததாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆல்பி ஜீன்ஸ் இறைக் கொள்கையை முழுவதுமாக ஒழிக்க ஜெபமாலை என்ற ஆயுதத்தை புனித சுவாமிநாதர் கையில் எடுத்தார், வெற்றியும் கண்டார். மூன்று: லெபென்றோ என்னும் இடத்தில் 1571 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே போர் மூண்டது. கிறிஸ்தவர்களும் போர் வீரர்களும் போரில் வெற்றிபெற ஜெபமாலை செபித்தனர், வெற்றியும் பெற்றனர். இதை முன்னிட்டு அக்டோபர் 7 ஆம் நாள் 1572 Mk;Mz L ‘வெற்றியின் அன்னை’ என்று மரியாவை வாழ்த்தினர். திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் ஜெபமாலையை ‘திருச்சபையின் ஜெபம்’ என்று அறிவித்தார். இவ்விழா 1716 உரோமை வழிபாட்டில் இணைக்கப்பட்டது. நான்கு: கிறிஸ்தவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் 1863ஆம் ஆண்டு போர் மூண்டது. கிறிஸ்தவர்கள் தோல்வி அடையும் நிலையில் இருந்தார்கள். மக்கள் நம்பிக்கையுடன் ஜெபமாலை ஜெபித்தார்கள். கிறிஸ்தவர்கள் வெற்றி பெற்றார்கள். திருத்தந்தை பதிமூன்றாம் கிரகோரி ஜெபமாலை அன்னை விழாவை ஆண்டுதோறும் அக்டோபர் 7ஆம் தேதி கொண்டாடப் பணித்தார். இவ்வாறு ஜெபமாலை சொல்லும் பழக்கம் திருச்சபையில் வளர்ந்தது. தூய ஜெபமாலை அன்னையின் மீது பக்தியும் பரவியது



**அன்னை மரியாவும் ஜெபமாலையும்**

திருச்சபையில் கத்தோலிக்க மக்களிடையே ஜெபமாலை ஜெபிக்கும் பக்தி முயற்சியானது நமது தாய் மரியாவுக்கு மிகவும் பிடித்தமானது என்பது அவரது சாட்சிகள் வழியாக அறிய வருகின்றோம். 1858ஆம் ஆண்டு பிப்ரவரி



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

13 முதல் 16 வரை வெளிப்படுத்திய காட்சியில் மசபியேல் குகையில் முத்துக்களாலான ஜெப மாலையை தன் கரத்தில் ஏந்தி இருந்ததாகவும் தெரிகிறது. உலக அமைதிக்காகவும், பாவிகள் மனமாற்றம் அடையவும் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு மணிகளை நகர்த்தியதாக பெர்னதெத் கூறியுள்ளார். இவ்வாறு லூர்து அன்னை ஜெபமாலை பக்தியை பரப்பினார். தொடக்க காலத்தில் பாத்திமாவின் ஜெபமாலை அன்னை என்று அழைக்கப்பட்ட அன்னைமரியா 1917 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாள் வரை அக்டோபர் 13ஆம் நாள் வரை வெளிப்படுத்திய காட்சிகளில் கரத்தில் ஜெபமாலை தாங்கியிருந்தார். லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கு ஆகிய மூவரிடமும் தினமும் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும் என்றும் விரைவில் முதலாம் உலகப்போர் முடிவுக்கு வரும் என்றும், உலக அமைதிக்காக, பாவிகள் மனந்திரும்ப, ஜெபம், தவம், தியாகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ஜெபமாலை ஜெபித்தல் மூலம் நாம் அடையும் நன்மைகளை அன்னை மரியா வழியாக நாம் அறிகிறோம். 'நாமே அமல உற்பவி' என்று கூறியதன் மூலம் நாம் தூய வாழ்வு வாழலாம் என்று வெளிப்படுத்துகிறார். தாம் காட்சி கொடுத்த இரு இடங்களிலும் ஜெபமாலை வழியாக பாவிகளை மனம் திருப்பலாம் என்று உணர்த்துகின்றார். 'ஓ என் இயேசுவே' என்ற ஜெபத்தை மரியாவே நமக்கு கற்றுக் கொடுத்து இருக்கின்றார். எனவே நாம் நமது இறப்பின் வேளையிலும், இறப்புக்குப் பின்பும், அமைதியுடனும், ஆனந்தத்துடனும் இருக்க இந்த எளிய ஜெபத்தை நமக்கு கற்றுத் தருகின்றார். நமது சொந்த கருத்துக்களுக்காக மட்டுமல்லாது, உலக அமைதிக்காக அனைவரும் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ள ஜெபமாலை வழியாக நம்மை அழைக்கின்றார். நமது அன்னை காட்சி கொடுத்த இரு புனித இடங்களிலும் நோயாளிகள் நலம் பெரும் புதுமைகளை நாம் அறிய வருகிறோம். ஜெபமாலை சொல்வதன் மூலமாகவே நாம் நமது ஆரோக்கியத்திற்காகவும், தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு வரும் உலகத்திற்காக நலமும், சுகமும் பெற்றுத்தர முடியும் என்று நம்புகிறோம். மூவொரு இறைவனையும் ஆழ்ந்து தியானிக்க அன்னை நம்மை தூண்டுகிறார். இவ்வாறு இறைவனையும் அவர் தம் மக்களையும் அன்பு செய்ய ஒரு ஒப்பற்ற வழியாக ஜெபமாலை விளங்குகிறது.

## ஜெபமாலை ஜெபிப்பது எப்படி?

ஜெபமாலையின் 20 மறை உண்மைகளும் மகிழ்வு, ஒளி, துயரம், மாட்சி என்ற நான்கு பிரிவுகளில் அதற்கென்று குறிக்கப்பட்ட நாளில் ஜெபிக்கிறோம். ஜெபமாலையை சிறப்பாக பக்தியுடனும் முழு கவனத்துடன் ஜெபித்து பலன் பெற ஒரு சில வழிகளை கடைபிடிக்கலாம். ஒவ்வொரு மறை உண்மைகளையும் ஒரு காட்சி படமாக நம் மனதில் நிறுத்தி ஜெபங்களை சொல்லலாம். மறை உண்மையோடு தொடர்புடைய நற்செய்திப் பகுதியை வாசித்து ஜெபிக்கலாம். சனிக்கிழமைகள் மற்றும் மரியாவின் விழாக்களின் போது ஒவ்வொரு பத்து மணிக்குப் பின்னும் பொருத்தமான மரியாவின் பாடல்களைப் பாடலாம். ஜெபத்தின் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து அதில் கவனம் செலுத்தி ஜெபிக்கலாம். மறை உண்மையை இன்றைய சூழலோடு இணைத்து பெண்கள், குழந்தைகள்,





1. புனித யாகப்பரின் நற்செய்தி
2. இலத்தின் போலி மத்தேயு
3. தோமையாரின் குழந்தை பருவ நற்செய்தி
4. பிலாத்துவின் பணிகள்
5. பிலிப்புவின் நற்செய்தி மற்றும்
6. மரியாவின் இறப்பு என்னும் தலைப்பில் எழுதப்பட்ட பல நூற்களும் முக்கியமானவை ஆகும்.

இந்நூல்களில் பல மரியாவின் கன்னித்தன்மையைப்பற்றி அதிகம் கவனம் செலுத்தி அதனையே அழுத்திக்காட்ட முயற்சி செய்தன. இருப்பினும் அவை பெரிதுபடுத்திப் பேசுவது கன்னிமையின் ஆன்மீக, சமய அர்த்தங்களை அல்ல, மாறாக அதன் உடன்கூறுகளையே. மேலும் மரியாவின் பிறப்பு வளர்ப்பு பற்றி பேசும்போதும் அவரது இறப்பு பற்றிய வருணைகளிலும் அவரது சிறப்பை மிக உயர்த்தி கூறும் வகையில் காட்சிகளும் அறிகுறிகளும், வியப்பில் ஆழ்த்தும் கற்பனை நிகழ்ச்சிகளும் இந்நூற்கள் விவரிக்கின்றன.

பழைய ஏற்பாட்டு வியப்பு நிகழ்ச்சிகளின் பாணியில் உருவாக்கப்பட்டு, இத்தகைய புதுப்புராணக் கதைகளை பெரும்பாலான அன்றைய கிறிஸ்துவ மக்கள் வரலாற்று உண்மைகளாகவும், வாழ்க்கை நிகழ்வுகளாகவும் ஏற்றுக்கொண்டனர். ஏன், இன்றும் இத்தகைய கண்ணோட்டம் மக்களிடையே தொடர்கின்றது.

## மரியா ஒரு தாய் தெய்வமா?



பெண் தெய்வங்களின் (Goddess) வழிபாடு பெருகியிருந்த ஒரு பிறசமயப் பின்னணியில்தான் உரோமைப் பேரரசின் கிறிஸ்தவம் பரவி வளர்ந்தது. கிரேக்க சமயத்து டெமெட்டர் (Demeter), உரோமையின் புகழ்பெற்ற சிபில் (Cybele), எபேசு நகரத்து டயானா (Diana of Ephesians), எகிப்தியரின் ஐசிஸ் (Isis of Ancient Egypt) போன்ற தேவதையர் பெண் தெய்வங்களாகவும் தாய் தெய்வங்களாகவும் (Mother Goddess) உரோமைப் பேரரசின் பல பகுதிளில் வணங்கப்பட்டன. கிறிஸ்தவத்தை தழுவிய உரோமைப் பேரரசின் மக்கள் பலர் இத்தகைய தாய் தெய்வ வழிபாட்டில் ஆர்வமுடன் பங்கேற்றவர்கள்தான். மேலும் உரோமைப் பேரரசின் ஆட்சி சமயமாக கிறிஸ்தவம் மாறியதும் இத்தகைய தாய் தெய்வங்களின் ஆலயங்கள் பல மரியாவின் ஆலயங்களாக மாற்றம் பெற்றன. அவர்களுக்கான விழாக்களும்



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!



# மரியா – கடவுளின் கடிதம் 4

அருட்பணி. லூர்துசாமி மஊச
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்

**திருமுறை புறநூல்கள் (Apocryphal writings) செய்த திசைமாற்றம்**

புதிய ஏற்பாட்டின் 27 நூல்களும் (Canonical books) தூய ஆவியின் தூண்டுதலால் (Divine origin) எழுதப்பட்டதாக திருஅவை வரையறுக்கின்றது. ஆனால் மேலும் பல நூல்கள் பொதுவாக இரண்டாம் – ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில் எழுதப்பட்டன. இவை பெரும்பாலும் விவிலிய நூல்களின் பாணியில் எழுதப்பட்டன. பிறர் எழுதி திருத்தூதர் அல்லது விவிலிய சான்றோர்களின் பெயரில் வெளியிடப்பட்டன. இயேசு அல்லது விவிலிய சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி விவிலியம் சொல்லாத விவரங்களை கற்பனை நிறைந்த உண்மைகளாக திரித்து எழுத்தப்பட்டன. பல இடங்களின் மாறுபட்டக் கருத்துக்களை மறைமுகமாகப் புகுத்தியுள்ளன. இவ்வாறு தப்பறைக் கொள்கைகளை இவை தம்முள் கொண்டிருந்ததாலோ, மிகைப்படுத்துதல் எனும் புராணப் பாணியில் புனையப்பெற்று கற்பனைக் கதைகளுக்கும் வியப்புறு நிகழ்ச்சிகளுக்கும் இந்நூல்கள் சிறப்பிடம் தந்ததினாலோ தொடக்க திருஅவை தனது திருமுறை (Canonical) அல்லது விவிலிய (Biblical) நூல் தொகுப்பில் இவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவேதான் இந்நூல்கள் திருமுறை புறநூல்கள் (Non canonical) என்று பெயர் பெறுகின்றன.

எனினும் கத்தோலிக்க திருஅவை இந்நூல்ளை பாரம்பரியத்தின் ஒருபகுதியாக (Traditions of the Catholic Church) பார்க்கின்றது. மேலும் இவை கிறிஸ்தவத்தின் தொடக்க நூற்றாண்டுகளிலும், ஏன் இன்னும் கூட கத்தோலிக்க மக்களிடையே அதிகம் செல்வாக்கு பெற்றிருந்தன. அவர்களது சமய கருத்துக்களையும், கற்பனைகளையும், பக்தியையும், வணக்க முறைகளையும் ஆழமாக பதிக்கவும் செய்தன. இத்தகைய தாக்கத்திற்கு அதிகம் ஆளான ஒரு துறைதான் மரியா வணக்கமும் சிந்தனையும் ஆகும். மரியாவின் வாழ்க்கை வரலாறு பற்றி புதிய ஏற்பாடு நமக்குத் தரும் செய்திகள் மிகக்குறைவு. இந்நிலையில் இயேசுவை இறைவன் என்று வழிபட்ட கிறிஸ்தவ மக்கள் அவரது தாய் மரியாவின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, பணிகள், அர்ப்பணம், இறப்பு, உயிர்ப்பு என்னும் சிறப்பு பற்றி அதிகம் தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டிருந்தது இயல்பானதே. இந்த ஆர்வத்தை நிறைவுசெய்யும் நோக்குடன் பல புத்தகங்கள் எழுதப்பட்டன. அவற்றுள் மரியா வணக்கங்களையும் சிந்தனையும் அதிகம் பாதித்தவை கீழ்க்கண்ட நூல்களே:





அகதிகள் ஆகியோருக்காக ஒப்புக் கொடுக்கலாம். உலக நாடுகளின் அமைதி, தொற்று நோயிலிருந்து விடுதலை, குடும்ப சமாதானம், திருச்சபையில் இறையாட்சி பணிகள் இயக்க தன்மையுடனும் நடைபெற ஜெபிக்கலாம். இவ்வாறு ஜெபிக்கும்போது சோர்வு ஏற்படாமலும் முழு கவனத்துடனும் தியான மன நிலையிலும் ஜெபித்து ஜெபமாலையின் முழுப்பயனையும் அடையலாம். ஜெபமாலை ஜெபிக்கும்போது மரியாவோடு இணைந்து மீட்பின் நிகழ்வுகளில் பயணிக்கின்றோம். மரியா போன்று அருள் நிலையில் நிலைத்து இருக்கின்றோம். அவரைப் போன்று இறைவார்த்தை தியானிப்பவர்களாக மாறுகிறோம். இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளை உள்ளத்தில் இருத்தி சிந்தனை செய்தது போல நாமும் நம்முடைய இதயங்களில் இயேசுவையும் இன்றைய நிகழ்வுகளையும் பொக்கிஷமாக நினைத்துப் பார்த்து ஜெபிக்கும் மனிதர்களாக மாறுகிறோம். சிதறிக் கிடந்த சீடர்களை ஒன்றிணைத்து தூய ஆவியின் அருளைப் பெற காத்திருந்தது போன்று இன்றும் நாம் திருச்சபைக்காக ஜெபிக்க அன்னை நமக்கு அழைப்பு விடுக்கின்றார். எனவே ஜெபமாலை சிறிய ஜெபமாக எளிய ஜெபமாக இருந்தபோதிலும் மூவொரு இறைவன் நம்மை அழைக்கின்றார். விண்ணக தந்தையிடம் நமக்கும் பிறருக்கும் தேவையான வேண்டுதல்களை எழுப்புகிறோம். அருள் நிறைந்த மரியே என்று வானதூதரின் வாழ்த்து மொழிகளை திரும்பத் திரும்ப உரைக்கும் போது மற்றொரு மரியாவாக நாம் மாற அவர் நமக்கு அருளைப் பெற்றுத் தருகிறார். பெண்களுக்குள் ஆசி பெற்றவர் பெண்களையும் மதிக்க போற்ற கற்றுத்தருகிறார். எனவே பொருள் உணர்ந்து ஜெபமாலை ஜெபிப்போம்.

**புனிதர்களின் வாழ்வில் ஜெபமாலை**

“ஜெபமாலை ஜெபிக்கும் போது மரியன்னையிடம் தோழமை கொண்டு இறைவனிடம் இணைகிறோம்” என்று புனித குழந்தை தெரசா கூறுகின்றார். புனித சார்லஸ் போரோமியோ “திருப்பலிக்கு பின் அதிக தெய்வீகம் கொண்டது ஜெபமாலை” என்று கூறுகிறார். “என் உடல் முழுவதும் நான் மாறினாலும் அன்னையின் புகழைப் பாட மறக்க முடியாது” என்று புனித அருளப்பர் எடுத்துரைக்கின்றார். “மனதிலே மரியாவை நினையுங்கள்: இதயத்திலே இயேசு வருவார்”என்று எடுத்து இயம்புகிறார் புனித அம்புரோஸ். “அருள்நிறை மரியே வாழ்க என்று நாம் தினந்தோறும் அன்னையை வாழ்த்தினால் அவரும் நம்மை வாழ்த்துவார்” என்று சொல்கிறார் புனித போனவெந்தூர். “ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் ஜெபமாலை மறை உண்மைகள் என்று ஜெபித்தால் புனிதத்தை அடையலாம்” என்று மொழிகிறார் புனித பிரான்சிஸ் சலேசியார். “எத்தகைய தீர்க்க முடியாத நெருக்கடியாக இருந்தாலும் ஜெபமாலையின் வல்லமையினால் தீர்வுகள் சுலபமாகும் என்று உரைக்கிறார்” புனித லூசியா. நாமும் நமது அனுபவங்களின் வழியாக ஜெபமாலையின் மகத்துவத்தை உணர்கிறோம். மீண்டும் நமது ஆர்வத்தை அதிலும் குறிப்பாக இளையோர் ஜெபிக்கும் ஆர்வக்கனலை எழுப்ப முயற்சி செய்வோம்.



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

## திருத்தந்தையர்களும் ஜெபமாலையும்

ஜெபமாலையின் திருத்தந்தை என்று 13ம் சிங்கராயர் அழைக்கப்படுகிறார். மனிதர்கள் எளிமையையும் தரித்திரத்தையும் வெறுக்கின்றார்கள். இவர்களுக்கு மகிழ்ச்சி மறை உண்மைகள் மருந்தாக அமைகின்றன. மனிதர்கள் துன்பத்தை உதறித் தள்ளுகின்றனர், இவர்களுக்கு துயர் மறை உண்மைகள் ஆறுதலாக இருக்கின்றன. மனிதர்கள் மறு உலக வாழ்வு பற்றிய மறதியுடன் இருக்கிறார்கள் இவர்களுக்கு மகிமை மறை உண்மைகள் தீர்வாக இருக்கின்றன என்று கூறி ஜெபமாலையை ஜெபிக்க வேண்டும் என்று திருத்தந்தை 13ம் சிங்கராயர் அறிவுறுத்துகின்றார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தான் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 24ம் ஆண்டு நினைவாக அக்டோபர் 16 2002ஆம் ஆண்டு திருத்தூதர் மடல் ஒன்றை வழங்கினார். அதில் ஒளியின் மறை உண்மைகளை வெளியிட்டார். "மகிழ்வு துயர மறை உண்மைகளுக்கு இடையில் இருந்த இடைவெளி நீக்கப்பட்டது. இறைமகன் இயேசுவின் வாழ்வில் நுழைகிறோம் என்றும் இந்த மறைஉண்மைகள் கிறிஸ்துவின் இதயத்தின் ஆழத்திற்கு அழைத்துச் செல்கிறது என்றும் அந்த இதயமானது மகிழ்வு, ஒளி, துன்பம், மகிமை இவற்றின் கடலாக இருக்கிறது" என்றும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார். திருத்தந்தை பிரான்சிஸ் ஜெபமாலையைப் பற்றி பின்வருமாறு எடுத்துரைக்கிறார் "ஜெபமாலையின் அழகைக் கண்டு கொள்ளுங்கள். மீட்பின் மறை உணண்மைகளை தியானிக்கும் போது இறைவனின் அன்பு முகத்தையே நாம் பார்க்கிறோம். இந்த பெருந்தொற்றுக்காலத்தில் நமக்காக நம்மால் அன்பு செய்யப்படுபவர்கள் எல்லாத் தீமைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் காப்பாற்ற ஜெபமாலையை ஜெபிப்போம். அனைவரும் நம்முடனே அதைத் தூக்கிச் செல்வோம். ஜெபமாலை ஜெபிக்கும்போது கத்தோலிக்க உலகம் இணைகின்றது என்றும் ஆணித்தரமாக நாம் குடும்பமாக ஜெபிக்க வேண்டிய அழகான ஜெபம் இது என்றும் கூறுகிறார்.

### நிறைவுரை

நாம் ஜெபமாலை ஜெபிக்கும்போது மரியா தம் வரங்களை நம்மீது பொழிகிறார். அவரது உடன் இருப்பை நம் வாழ்வில் அதிகம் உணருகிறோம். இயேசுவைப் பின்பற்றுவது நமக்கு எளிதாகிறது. ஜெபமாலை அருளடையாளங்களுக்கு மிக அருகில் நம்மை அழைத்துச் செல்கின்றது. இறுதியாக நம்மை புனிதர்களாக புனிதைகளாக மாற்றுவார். ஜெபமாலை வழியாக புனிதத்தில் வளர்ந்தவர்களை நாம் அறிவோம். புனிதர்கள் பியோ,தெரேசா அன்னை மற்றும் இரண்டாம் அருள் சின்னப்பர் இன்னும் பலர். நாம் வாழும் காலம் ஜெபிக்க நம்மை அழைக்கின்றது. மரியா நம்மிடம் பேச விரும்புகின்றார். அதற்கு செவிமடுப்போம். குடும்ப ஒற்றுமைக்காக, மனங்கள் அமைதியில் நிலைக்க, உலக சமாதானத்திற்காக, தீமைகள் நோய்கள் நீங்கி எங்கும் ஒரே கத்தோலிக்க வெற்றியின் மாலையை ஜெபிப்போம். வெற்றியின் அன்னை ஜெபமாலை அரசி நம்மை என்றும் அவரது அரவணைப்பில் வைத்து காத்திடுவார்.





"இறைக்கிற கிணருதான் ஊறும்" என்று சொல்வார்கள். ஒரு கிணற்றில் தொடர்ந்து நீர் இறைக்கின்ற போதுதான் அக்கிணற்றில் தொடர்ந்து தண்ணீர் ஊறிக்கொண்டே இருக்கும். இறைக்காத கிணறு வற்றிவிடும். அதேபோல் நம்மிடம் இருக்கின்ற செல்வத்தை நாம் மற்றவரோடு பகிர்ந்து கொள்கின்றபோத அச்செல்வமானது பெருகும்.சாரிபாத்து கைம்பெண் தன்னிடம் இருந்த சிறிய அளவு மாவில் இறைவாக்கினர் எலியாவுக்கு அப்பம் சுட்டுக் கொடுத்தார். அவருடைய பானையிலிருந்த மாவு பெருகிக்கொண்டே இருந்தது. கலையத்திலிருந்த எண்ணையும் குறையவில்லை. எனவே, நாமும் நம்மிடம் இருப்பதை பகிர்ந்து கொண்டு அவற்றை நிறைவாக பெருக்கிக் கொள்ள வரம் வேண்டியவர்களாக இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

இவ்வுலகின் பாவங்களைப் போக்குவதற்காக இம்மண்ணில் உதித்த ஆண்டவர் இயேசு ஒருமுறை பாடுபட்டு தன்னை பலியாகக் கொடுத்து நம் பாவங்களைக் கழுவியிருக்கின்றார். இப்பொழுது அவர் விண்ணுலகில் நுழைந்து நம் சார்பாக கடவுளின் திருமுன்னிலையில் நின்று நமக்காக பரிந்து பேசுகின்றார். அவர் மீண்டும் தோன்றுவார். ஆனால் மறுபடியும் நமக்காக பாடுபட்டு மரிப்பதற்காக அல்ல. மாறாக, நமக்கு நியாயத் தீர்ப்பு வழங்குவதற்காக. எனவே, அவர் மறுபடியும் தோன்றும்போது அவரை எதிர்கொள்ள நாம் தகுதிபெறும் பொருட்டு தூய வாழ்வு வாழ வரம் வேண்டியவர்களாக இவ்வாசகத்திறகு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் இறை மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து அவர்கள் நீதியின் வழியில் வாழ உதவி செய்திடும் நல்தலைவர்களாக வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. எல்லாம் வல்ல இறைவா, நாங்கள் எங்கள் சமுதாயத்தில் வாழும் நல்ல மனிதர்களைப் பின்பற்றி அவர்களைப் போல் நேர்மையோடும், நீதியோடும், அன்போடும், பண்போடும் வாழ்ந்து கிறிஸ்துவை மாட்சிப்படுத்துகின்ற மக்களாகவும், இவ்வுலகில் நல் மனிதர்களாகவும் வாழ வரம்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகினறோம்.
3. பகிர்தலின் இறைவா, நாங்கள் எங்களிடம் இருக்கும் செல்வத்தை ஏழை எளியவர்களோடு பகிர்ந்து வாழ்ந்து அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற நல்ல உள்ளத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. கனிவின் இறைவா, இவ்வுலக மக்கள் அனைவரையும் இயற்கையின் சீற்றங்களிலிருந்தும், கொடிய நோய்களிலிருந்தும் பாதுகாத்து உம்முடைய பராமரிப்பில் என்றும் மகிழ்ச்சியோடும், மனநிம்மதியோடும் வாழச் செய்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

## பொதுக்காலம் முப்பத்திரெண்டாம் ஞாயிறு

1அர 17:10-16 எபி 9:24-28 மாற் 12:38-44

### திருப்பலி முன்னுரை

இறையேசுவில் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, நாம் வாழும் சமுதாயத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள், தீயவர்களும் இருக்கிறார்கள்.நாம் யாரைப்போல வாழவேண்டும், யாரைப்போல வாழக்கூடாது என்பதை இன்றைய இறைவார்த்தை சுட்டிக்காட்டுகின்றது. இன்றைய நற்செய்தியில் மறைநூல் அறிஞர் பற்றியும், ஏழைக்கைம்பெண் பற்றியும் எடுத்துச் சொல்லி நாம் யாரைப் பின்பற்ற வேண்டும் என்பதை ஆண்டவர் சுட்டிக் காட்டுகின்றார். மறைநூல் அறிஞர்கள் என்பவர்கள் இயேசுவை மீட்பராக ஏற்றுக் கொள்ளாதவர்கள். பரிசேயர்களோடு சேர்ந்து இயேசுவை பழிவாங்கத் துடித்தவர்கள். பல நேரங்களில் இயேசுவோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை எப்படியாவது பிரச்சினையில் சிக்கவைக்க வேண்டும் என்று அங்கலாய்த்தவர்கள். வெளிவேடக்காரர்களாக வாழ்ந்தவர்கள். வெளியிலே தங்களை நீதிமான்களாகக் காட்டிக் கொண்டு உள்ளுக்குள் பாவிகளாக வாழ்ந்தவர்கள். இவர்களைப் போல் நாம் வாழக்கூடாது என்பதை இயேசு எடுத்துச் சொல்லி நாம் அனைவருமே ஏழைக் கைம்பெண்ணைப் போல் வாழ அழைப்புக் கொடுக்கின்றார். ஏழைக் கைம்பெண் தம்மிடம் இருந்த அனைத்தையுமே கோயில் உண்டியலில் போட்டுவிட்டு இறைவனுடைய பராமரிப்பில் நம்பிக்கை கொண்டிருந்தார். தன்னுடைய அடுத்த வேளை உணவைப் பற்றியோ, தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியோ துளிகூட கவலைப்படவில்லை. மாறாக, தன்னைப் படைத்த கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு அவர் என்னைப் பார்த்துக் கொள்வார், பராமரித்துக் கொள்வார் என்ற எண்ணத்தில் தன்னிடமிருந்த எல்லவற்றையும் கடவுளுக்கு காணிக்கையாக்கிவிட்டார். இந்த கைம்பெண்ணைப் போல் நாம் அனைவருமே எப்பொழுதும் கடவுளுடைய பராமரிப்பில் நம்பிக்கை வைத்து வாழவேண்டும் என்பதை ஆண்டவர் சுட்டிக்காட்டுகின்றார். எனவே, மறைநூல் அறிஞர், பரிசேயரைப்போல் வெளிவேடத்துடன் வாழாமல், ஏழைக் கைம்பெண்ணைப்போல் எளிமையோடும், இறை பராமரிப்பில் நம்பிக்கையோடும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கொடுப்போம்.



### முதல் வாசக முன்னுரை



மரிவழி இறைப்பணி

## பாப்பாவுக்கு பாட்டு

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

மணிமணியாய் சொல்வாயே பாப்பா- அன்னை
மணிமுடியில் வைரம்நீ பாப்பா
மனதுருகி சொல்வாயே பாப்பா - உன்னை
மனம்குளிர வைப்பாரே பாப்பா
தவறாமல் சொல்வாயே பாப்பா - என்றும்
மறவாமல் காப்பாரே பாப்பா
சோம்பாமல் சொல்வாயே பாப்பா - பெரும்
சோதனைகள் வெல்வாயே பாப்பா
துன்பங்கள் தலைசூழ்ந்த போதும் - முற்றும்
துவளாமல் நீசொல்லு பாப்பா
இன்பங்கள் நிலைமாற்றும் போதும் - சற்றும்
திளையாமல் நீசொல்லு பாப்பா
கவலைகள் சொல்லியழு பாப்பா - மாற்றும்
திறமைகள் அவர்தருவார் பாப்பா
கருணைகள் சொல்லியெழு பாப்பா - உந்தன்
கரம்பிடித்து நடத்துவரே பாப்பா
அன்றாடம் நீசொல்லு பாப்பா -தீமை
அண்டாமல் சேர்ப்பாரே பாப்பா
பக்தியாய் நீசொல்லு பாப்பா - உன்
முக்திக்கு வழியதுவே பாப்பா
புத்திக்காய் மன்றாடு பாப்பா - எல்லா
சக்தியும் உடன்தருவார் பாப்பா
எல்லார்க்கும் மன்றாடு பாப்பா - உன்னை
நல்லாராய் நலம்வாய்ப்பார் பாப்பா
பொல்லார்க்கும் மன்றாடு பாப்பா - அன்னைக்கு
பொருத்தமாய் நீயிருப்பாய் பாப்பா
முதியோர்க்காய் மன்றாடு பாப்பா - நிறை
வெகுமதியை நீபெறுவாய் பாப்பா
எளியோர்க்காய் மன்றாடு பாப்பா - உன்னை
வலியோராய் உயர்த்துவாரே பாப்பா
செபமாலை செபமாலை பாப்ப - என்றும்
செயசெயமே செயசெயமே பாப்பா



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

# திருத்தந்தையின் தேவதாய் சிந்தனைகள்



அருள்பணி. அமல் ம. ஊ. ச. உரோமை

## சிமியோன் ஆண்டவருடைய செயலுக்கு இணக்கமுள்ளவராக இருக்கின்றார்.

சிமியோன் கடவுளுடைய மறைபொருளான, அன்பான திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தனது விசுவாசிகளின் மீது ஆவியைப் பொழிகின்ற ஆண்டவருடைய இரக்கமுள்ள செயலை தியானிக்க நம்மை அழைக்கின்றார்.

1. கோவிலில் இயேசுவைக் காணிக்கையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வை விவரிக்கும், நற்செய்தியாளர் தூய லூக்கா, இயேசுவே வரவிருக்கும் மீட்பர் என்கின்ற செய்தியை வலியுறுத்துகின்றார். லூக்கா நற்செய்தியைப் பொருத்தவரை பெத்லகேமில் இருந்து எருசலேமுக்குத் திருக்குடும்பத்தினுடைய பயணத்தின் முதல் நோக்கம் திருச்சட்டத்தை நிறைவேற்றுவதாகும். “மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். ஏனெனில், “ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்” என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒரு சோடி மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது” (லூக்கா 2: 22-24).

இந்தச் செயலின் மூலம், மரியாளும் யோசேப்பும் கடவுளின் விருப்பத்திற்கு உண்மையாகக் கீழ்ப்படிந்து, எல்லா வகையான சலுகையையும் *(privilege)* நிராகரிக்கும் தங்கள் நோக்கத்தைக் காட்டுகிறார்கள். எருசலேம் கோவிலுக்கு அவர்கள் வருவது, இறைவன் இருக்கும் இடத்திற்கு வந்து அவருக்கு அர்ப்பணிப்பு செய்வதை இலக்காகக் கொண்டிருந்தது. தனது வறுமையின் காரணமாக மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை வழங்கக் கடமைப்பட்ட மரியாள், உண்மையில் பழைய சட்டத்தின் சடங்குகளில் முன்னுரைக்கப்பட்டதை முன்னதாகவே நிறைவேற்றும் விதமாக மனித குலத்தை மீட்கும் உண்மையான ஆட்டுக்குட்டியையே காணிக்கையாகக் கொடுக்கிறாள்.

### சிமியோன் தூய ஆவியால் உந்தப்பட்டார்

2. தாயிடம் பிறக்கும் பிறப்புக்குப் பிறகு தூய்மைப்படுத்தும் சடங்கு தேவைப்பட்டதால், தூய லூக்கா “தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள்” (லூக்கா 2:22) பற்றிப் பேசுகிறார், இதன் மூலம் தாய் மற்றும் தலைப்பேறான மகன் இருவரும் சம்பந்தப்பட்ட





வாழ்க்கை. எனவே, இறைவனையும், நம் சக மனிதர்களையும் அன்பு செய்து நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வரம் வேண்டியவர்களாக இத்திருப்பலியில் பங்கொடுப்போம்.

### முதல் வாசக முன்னுரை

நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே உண்மையான கடவுள். வேறு கடவுள் நமக்கு இல்லை. அவருக்கு அஞ்சி அவருடைய கட்டளைகளையும், நியமங்களையும் கடைபிடிப்பவர்கள் நீண்ட ஆயுளோடும், செழிப்போடும் வாழ்வார்கள என்பதை இன்றைய முதல் வாசகம் சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாசகத்திற்கு செவிகொடுத்து நம் கடவுளை முழுமையாக அன்பு செய்து அவருடைய கட்டளைகளைக் கடைபிடித்து வாழ முயற்சி செய்வோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் என்றும் குருவாக இருந்து அவரிடம் வருபவர்களுக்காக தந்தையாகிய இறைவனிடத்தில் பரிந்து பேசுகின்றார். அம்மக்களை மீட்கின்றார். இவர் தம்மீது நம்பிக்கை கொண்டோருக்காக தன்னையே பலியாகக் கொடுத்தவர். தூயவராகவும், கபடற்றவராகவும், மாசற்றவராகவும் இருந்தபொழுதும் மக்களின் மீட்புக்காக பலியான செம்மறி அவரே. அவரிடம் நம்பிக்கை கொண்டு அவருடைய பரிந்துரையையும், மீட்பையும் பெற்றுக் கொள்ளும் ஆவலோடு இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. ஒற்றுமையின் இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்கி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்கள் ஒற்றுமையோடும், கிறிஸ்துவின் போதனைக்கும் ஏற்றபடி வாழ அவர்களை நல்வழியில் நடத்திட தேவையான வரம்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள அனைத்துக் கட்டளைகளையும், நியமங்களையும் முழுமனதோடு கடைபிடித்து அதன் வழியாக நீர் எங்களுக்கு வாக்களித்துள்ள நிலைவாழ்வு என்னும் பரிசைப் பெற்றுக்கொள்ள அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. கருணையின் இறைவா, நாங்கள் அனைவரும் எங்களுக்குள் எந்த ஏற்றத் தாழ்வுகளும், வேற்றுமைகளும் இல்லாமல் நாங்கள் அனைவருமே இறைவனுடைய மக்கள் என்ற முறையில் ஒற்றுமையோடு ஒரே உள்ளமும், எண்ணமும், சிந்தனையும், செயலும் கொண்டு வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஆற்றலின் இறைவா, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அனைவரும் இறையன்பு, பிறரன்பு கட்டளைகளை முழுமனத்தோடு கடைபிடித்து, இவ்வுலக செல்வங்கள், உறவுகளுக்கு மேலாக உம்மை முழுமையாக அன்பு செய்து அதன் வழியாக எங்கள் அயலாரையும் அன்பு செய்து எங்கள் அன்றாட கிறிஸ்தவ வாழ்வை நாங்கள் நல்ல முறையில் வாழ ஆற்றல் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

எல்லா சூழ்நிலைகளையும் நாங்கள் விலக்கி கிறிஸ்தவ நம்பிக்கையில் நிலைத்து நிற்க அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. நலன்களின் இறைவா, பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைவருக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவருடைய நம்பிக்கையைக் கண்ணுற்றுப் பார்த்து அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களைக் குணப்படுத்தி நல்ல உடல் சுகத்தைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. கனிவின் இறைவா, நோயாளிகள் அனைவரும் தங்கள் துன்ப நேரத்தில் பார்வையற்ற மனிதரைப் போல எல்லா சவால்களையும் தாண்டி உம்மை நோக்கி கூக்குரலிட்டு உம்முடைய கருணையையும், இரக்கத்தையும் பெற்று உடல் உள்ள ஆரோக்கியத்தோடு வாழ வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.



## பொதுக்காலம் முப்பத்தொன்றாம் ஞாயிறு

**இச 6:2-6 எபி 7:23-28**
**மாற் 12:28b-34**

### திருப்பலி முன்னுரை

இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தின்போது கடவுள் மோசே வழியாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். அந்த பத்துக் கட்டளைகளில் முதல் மூன்று கட்டளைகள் கடவுளை மையமாகக் கொண்டது. கடவுளை நாம் எப்படி அன்பு செய்ய வேண்டும், எந்தவகையில் கடவுளுக்கு பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. அடுத்த ஏழு கட்டளைகள் பிறரன்பை மையமாகக் கொண்டவை. நாம் நம்முடைய பெற்றோரை, சகோதர, சகோதரிகளை, நம் அயலாரை எப்படி அன்பு செய்ய வேண்டும், எத்தகைய மரியாதையை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த பத்துக் கட்டளைகளை ஆண்டவர் இயேசு சுருக்கி இறையன்பு, பிறரன்புக் கட்டளை என பொன் விதியை நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் நம்மைப் படைத்து, பராமரித்து, மீட்டு, காத்து வருகின்ற கடவுளை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்ய வேண்டும். நம்முடைய முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு செய்ய வேண்டும். அதாவது, இந்த உலக செல்வங்கள், இவ்வுலக உறவுகள் இவை அனைத்தையும் விட கடவுளை அன்பு செய்ய வேண்டும். இந்த இறை அன்பானது நம்மை பிறரன்புக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் அன்பு செய்து அனைவருக்கும் உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். அதுதான் உண்மையான கிறிஸ்தவ





பரிந்துரைகளை ஒருவேளை சேர்த்தே குறிப்பிடுவதற்கு விரும்புகிறார் என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

அன்னை மரியாள் தனி அருளால் *(singular grace)* நிரப்பப்பட்டதொரு தாய் மற்றும் அவள் பிறந்தது முதல் மாசற்றவளாக இருந்தாள். மேலும் அவளுடைய பிள்ளையாகிய இயேசுவும் முற்றிலும் புனிதமான நிலையில் இருந்ததாகவே குறிப்பிடப்படுவதால் இங்கு "தூய்மைப்படுத்துதல்" என்ற வார்த்தை நம்மை சற்று ஆச்சரியப்படுத்தலாம். இருப்பினும், இது மனச்சாட்சியைப் பாவத்தின் சில கறைகளிலிருந்து தூய்மைப்படுத்துதல் பற்றிய கேள்வியல்ல *(it was not a question of purifying the conscience from some stain of sin)*, மாறாக சடங்குத் தூய்மையை மீண்டும் பெறுவது *(reacquiring ritual purity)* மட்டுமே, அக்காலக் கருத்துக்களின்படி பிறப்பு இல்லாமல் எளிமையான பிறப்பால் பாதிக்கப்படலாம். தூய்மைச் சடங்கு பற்றி விவரிக்கும் நற்செய்தியாளர், "முதல் பிறந்தவர்" *(first born)* என்கின்ற பதத்தை (லூக்கா 2: 7, 23) இயேசுவுக்கும் கடவுளின் தூய்மைக்கும் இடையே உள்ள சிறப்பு தொடர்பை வலியுறுத்தவும், மரியாள் மற்றும் யோசேப்பை ஊக்குவித்த அவர்களுடைய தாழ்மையான அர்ப்பணத்தைக் குறிப்பிடுவதற்கும் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார் Cf. லூக்கா 2:24). உண்மையில், "இரண்டு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகள்" (லேவியர் 12: 8), ஏழைகளின் காணிக்கைகளாக இருந்தது.

3. யோசேப்பும் மரியாளும் கோவிலில், "நேர்மையான மற்றும் இறைப்பற்றுக் கொண்ட, இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்த" (லூக்கா 2:25) சிமியோனைச் சந்தித்தனர்.

நற்செய்தியாளர் லூக்காவினுடைய இவ்விவரிப்பு சிமியோனுடைய கடந்த காலத்தைப் பற்றியோ அல்லது கோவிலில் அவர் செய்த சேவையைப் பற்றியோ எதுவும் கூறவில்லை. அது தனது இதயத்தில் பெரும் ஆசைகளை வளர்த்து, இஸ்ரேயேலின் ஆறுதல் தரும் மீட்பருக்காகக் காத்திருந்த ஒரு ஆழ்ந்த இறையனுபவமுள்ள மனிதனைப் பற்றிக் கூறுகிறது. உண்மையில், "தூய ஆவியை அவர் பெற்றிருந்தார்" மற்றும் "ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் அவர் சாகப்போவதில்லை" என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார் (லூக்கா 2: 25-26). ஆண்டவருடைய புரிந்துகொள்ள இயலாத அன்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவருடைய விசுவாசத்தின்மீது ஆவியைப் பொழியும் கடவுளுடைய இரக்கமுள்ள செயலைக் காண்பதற்கு சிமியோன் நம்மை அழைக்கின்றார்.

கடவுளின் செயலுக்குத் திறந்த மனதுள்ள மனிதரான சிமியோன், "ஆவியால் ஈர்க்கப்பட்டு" கோவிலுக்குச் செல்கிறார் (லூக்கா 2:27), இங்கு இயேசு, யோசேப்பு மற்றும் மரியாளைச் சந்திக்கிறார். குழந்தையைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு, கடவுளைப் போற்றி "ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர்" (லூக்கா 2:29) என்று கூறுகின்றார். சிமியோன் பழைய ஏற்பாட்டின் சொற்றொடரைப் பயன்படுத்தி, மெசியாவைச் சந்தித்ததில் அவர் அனுபவித்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார், மேலும் அவரது வாழ்க்கையின் நோக்கம்



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

நிறைவேறியதாக உணர்கிறார். எனவே, அடுத்த உலகத்திற்கு அமைதியாகப் போக அனுமதிக்குமாறு அவர் கடவுளிடம் கேட்கின்றார்.

**யோசேப்புவும் மரியாளும் மனுக்குலத்தினுடைய மீட்பரை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றனர்**

இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கும் அத்தியாயத்தில், மீட்பருடனான இஸ்ரேயேலின் நம்பிக்கையினுடைய சந்திப்பை நாம் பார்க்கலாம். கிறிஸ்துவோடு மனிதன் சந்தித்ததற்கான தீர்க்கதரிசன அடையாளத்தையும் நாம் இதில் காணலாம். தூய ஆவியானவர் மனித இதயத்தில் இந்த மீட்பின் சந்திப்புக்கான ஆசையை எழுப்புவதன் மூலமும் அதை ஏற்படுத்துவதன் மூலமும் சாத்தியமாக்குகிறார். முதியவரான புனித சிமியோனிடம் குழந்தையைக் கொடுக்கும் மரியாளின் பங்கையும் இங்கு நாம் புறக்கணிக்க முடியாது. இறை விருப்பத்தினால், மரியாள்தான் மனிதகுலத்திற்கு இயேசுவை அர்ப்பணிக்கின்றார்.

4. மீட்பருடைய எதிர்காலத்தை வெளிப்படுத்துவதில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட "ஊழியனாக" நின்று சிமியோன் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடுகிறார். இறைவன் அவரிடம், "ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன், உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன் மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன்". (எசாயா 42: 6) என்கின்றார். மீண்டுமாக: "யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்" (எசாயா 49: 6) என்றும் கூறுகின்றார்.

சிமியோன் தனது பாடலில், அவருடைய தனிப்பட்ட எண்ண ஓட்டத்தை மாற்றியமைத்து, இயேசுவினுடைய பணியின் உலகளாவிய பொதுத் தன்மையை இவ்வாறு வலியுறுத்துகின்றார்: "மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை" (லூக்கா 2: 30-32).

இவ்வார்த்தைகள் குறித்து நாம் வியப்படையாமல் எப்படி இருக்க முடியும்? இதையே நற்செய்தியாளர் லூக்காவும் இவ்வாறு கூறுகின்றார்: "குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர்" (லூக்கா 2: 33). ஆனால் இந்த அனுபவமானது யோசேப்பு மற்றும் மரியாள் இவர்கள் இருவருக்கும் அவர்கள் செய்த அர்ப்பணத்தின் முக்கியத்துவத்தை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவியது: அதாவது, இறைவனுடைய மக்களின் மகிமையாக இருப்பவரும், மனித குலம் அனைத்தினுடைய மக்களின் மீட்பரும் ஆனவரையே அவர்கள் அர்ப்பணிக்கின்றனர்.

மூலம்:

John Paul II, *Simeon is open to the Lord's action*, in *l'Osservatore Romano* weekly edition in English, 18/25 December 1996, p. 9.





இருக்கின்றார். இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவுடைய இரக்கப் பார்வை பர்த்திமேயு என்பவர் மீது விழுந்தது. பார்வையற்ற பர்த்திமேயு பார்வை பெற்றார். இந்த புதுமை நடந்தேறியதற்கு காரணம் பர்த்திமேயு கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை. இயேசு வருவதை அறிந்த அவர் "தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என்று நம்பிக்கையோடு கத்தினார். சுற்றியிருந்தவர்கள் "பேசாதே" என்று அதட்டியபோதும் அவர் தன் நம்பிக்கையில் சோர்ந்து போகவில்லை. விடாமல் கத்தினார்: கிறிஸ்துவின் கருணையைப் பெற்றார். நாமும் நம்முடைய வாழ்வில் பல்வேறு தேவைகளுக்காக இறைவனிடத்தில் மன்றாடும்போது நம்முடைய விசுவாசத்திற்கும் தடையாக பல காரியங்கள், பல மனிதர்கள் "பேசாதே" என்று அதட்டுவார்கள். அச்சூழலில் நாம் நம்முடைய நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. "அந்தக் கோயிலுக்கு போ, இந்த குறி சொல்பவரிடம் போ, அந்த கையிறைக் கட்டு" என்று நம் இயேசுவிடம் நாம் குரலெலுப்புவதற்கு தடையாக இருபபார்கள். இயேசுவிடம் "பேசாதே" என்று சொல்வார்கள். அவர்களைக் குறித்து கவனமாயிருந்து நம் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியோடு வாழ்கின்றபோது நம் வாழ்விலும் நாம் பல அதிசயங்களையும், அற்புதங்களையும் காண்போம் என்ற நம்பிக்கையோடு இக்கல்வாரி பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

பார்வையற்றோரும், காலூனமுற்றவரும், கருவுற்றோரும், பேறுகாலப் பெண்டிரும் கடவுளின் இரக்கத்தைப் பெறுகின்றார்கள். கடவுள் தாம் படைத்த எல்லா மக்களையும் அன்பு செய்கின்றார். எல்லாருக்கும் இரக்கம் காட்டுகின்றார். எல்லாருக்கும் தந்தையாக இருந்து தம் மக்களை நேரிய வழியிலும், வளமையான நீரோடையோரமும் நடத்துகின்றார். அவர் கரம் பிடித்து நடக்க வரம் வேண்டியவர்களாக இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

மெல்கிசெதேக்கின் முறைப்படி ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்றென்றும் குருவாக இருக்கின்றார். அவர் தம்முடைய குருத்துவ அர்ச்சிப்பு பணியை தொடர்ந்து நிறைவேற்ற தமக்கென குருக்களைத் தேர்ந்தெடுக்கின்றார். அவரால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற குருக்கள் அறியாமையிலிருப்போருக்கும், நெறிதவறியவருக்கும் பரிவு காட்டி அவர்களும் இறை இரக்கத்தைப் பெற உதவி செய்ய வேண்டும் என வலியுறுத்தும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல இறைவா, புனித திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை நேரிய வழியில் நடத்தி இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியை திறம்படச் செய்ய தேவையான அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, நாங்கள் எங்கள் வாழ்வில் வரும் எல்லாத் துன்ப நேரங்களிலும் எங்கள் இறை நம்பிக்கையில் மன உறுதியோடு வாழச் செய்தருளும். எங்களுடைய நம்பிக்கைக்கு தடையாக இருக்கும்



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

ஒருபோதும் பாவம் செய்யவில்லை. பாவமற்ற செம்மறியான அவரை அணுகிச் சென்று நாம் இறைமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இறைவனின் இரக்கத்தைப் பெறவும், இறையருளைக் கண்டடையவும் நாம் இறைவனை நோக்கிப் பயணப்பட அழைப்புக் கொடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல இறைவா, உம் புனித திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்துடன் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற பணியை செய்து திருஅவையை வளர்த்திட அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகினறோம்.
2. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் எளிய மனத்தோடு அனைவருக்கும் பணிவிடை செய்து வாழவும், எங்கள் ஊழியத்தின் வழியாக நாங்கள் எங்கள் தலைவராம் கிறிஸ்துவை முழுமையாகப் பின்பற்றவும் வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. ஆறுதலின் இறைவா, நற்செய்திக்காகவும், கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்காகவும் துன்புறும் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். அவர்கள் துன்பத்தில் நீர்தாமே அவர்களுக்கு துணையாக இருந்து அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதியுடன் வாழ தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. வல்லமையின் இறைவா, பலவீனத்தோடும், வலுவின்மையோடும் பல பாவங்கள் செய்து வாழும் எங்கள் மீது இரக்கமாயிரும். நாங்கள் எங்கள் பலவீனத்தில் விழுந்து கிடக்காமல்,எழுந்து புனித பாதையில் வாழத் தேவையான அருள்வரங்களைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் முப்பதாம் ஞாயிறு**

**எரே 31:7-9 எபி 5:1-6 மாற் 10:46-52**

**திருப்பலி முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இன்றைய இறைவார்த்தை நம் அனைவரையும் கிறிஸ்துவின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ அழைப்புக் கொடுக்கின்றது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டவர்கள் மீதும், ஒடுக்கப்பட்டவர்கள் மீதும், நோயாளிகள் மீதும் அதிக இரக்கமும், பரிவும், கரிசணையும் கொண்டவர். அவர்களுடைய கூக்குரலுக்கு என்றும் செவிகொடுப்பவர். அவர் மீது முழுமையான, ஆழ்ந்த நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் அவர் நன்மை செய்பவராக









# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருட்பணி. கில்பர்ட்ராஜ் OSM
குழந்தை இயேசு ஆலயம், சென்னை

**பொதுக்காலம் இருபத்தெட்டாம் ஞாயிறு**

**சாஞா 7:7-11 எபி 4:12-13 மாற் 10:17-30**

**திருப்பலி முன்னுரை**

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிற்றுக்கிழமை நாம் வாசிக்கும் இறைவார்த்தை நம் அனைவரையும் உண்மையான சீடத்துவ வாழ்க்கை வாழ்ந்து நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள அழைப்புக் கொடுக்கின்றது. கிறிஸ்தவ சீடத்துவ வாழ்க்கை என்பது மேம்போக்காக வெறுமனே கட்டளைகளைக் கடைபிடிப்பதில் அல்ல. ஞாயிற்றுக் கிழமை திருப்பலிக்கு வந்தால் மட்டும் போதாது. திருவருட்சாதனங்களைப் பெற்றால் மட்டும் போதாது. மாறாக, அவற்றைத் தாண்டி சில நல்ல காரியங்களைச் செய்வதில் அடங்கியிருக்கிறது. இன்றைய நற்செய்தியில் வரும் இளைஞன் கட்டளைகளை கடைபிடித்தான்: யாருக்கும் கெடுதல் செய்யவில்லை: நேர்மையாளனாக வாழ்ந்தான். ஆனால் அதே நேரத்தில் அவனிடம் இருந்த செல்வத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள தவறிவிட்டான்.பத்துக் கட்டளைகளைக் கடைபிடிப்பதும், திருஅவை கட்டளைகளைக் கடைபிடிப்பதும் மிக எளிது. ஆனால் நம்மிடம் இருப்பதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதும், மற்றவர்களின் நலனுக்காக பல தியாகங்களை மேற்கொள்வதும் கடினமானது. உலக செல்வங்களில் அதிக நாட்டம் கொள்ளாமல் இறை ஞானத்தில் அதிக நாட்டம் கொண்டு வாழ்கின்றபோது இவை நமக்கு எளிமையாகிவிடும். சாலமோன் மன்னன் இறைஞானத்திற்கு ஈடாக இவ்வுலகில் எதுவுமில்லை என்று உணர்ந்தார் இறைவிருப்பத்தின்படி வாழ்ந்தார். நாமும் நம் அன்றாட வாழ்வில் இறை ஞானத்தைப் பெற்றுக் கொண்டு அஞ்ஞானம் காட்டுகின்ற வழியில் வாழ்ந்து இறைவன் நமக்கு அருளும் நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்ள வரம் வேண்டியவர்களாக இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.





This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!

**முதல் வாசக முன்னுரை**

இறை ஞானத்தோடு ஒப்பிடுகின்ற போது இவ்வுலகத்தில் அதற்கு ஈடான செல்வம் எதுவுமில்லை. இவ்வுலக அதிகாரமோ, பதவியோ, படிப்போ எதுவுமே ஈடாகாது. விலையுயர்ந்த மாணிக்கக் கல்லும், பொன்னும், வெள்ளியும் களிமண்ணாகவே கருதப்படும் எனக் கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுத்து இறை ஞானத்தைத் தேடி கண்டடைய முயற்சி செய்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இறைவனுடைய வார்த்தை ஆற்றல் வாய்ந்தது. துன்பத்தில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியையும், தனிமையில் வாடுவோருக்கு ஆறுதலையும் கொடுப்பது இறைவார்த்தை. தீமை செய்வோருக்கு நல்வழியையும், இருளில் வாழ்வோருக்கு ஒளியையும் காட்டுவது இறை வார்த்தை. பாவிகளுக்கு மன்னிப்பையும், நோயாளிகளுக்கு சுகத்தையும் தருவது இறைவார்த்தை. அத்தகைய இறைவார்த்தையை வாழ்வாக்க அழைப்புக் கொடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் இறை ஞானத்தோடு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மந்தையை வழிநடத்த தேவையான அருளையும், உடல், மன வலிமையையும் அவர்களுக்குத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. கருணையின் இறைவா, உம்முடைய மக்களாகிய நாங்கள் நிலையற்ற இவ்வுலக செல்வங்களில் நாட்டம் கொள்ளாமல் நிலையான செல்வமாகிய உம்மை முழுமையாகப் பற்றிக் கொண்டு நல்ல சீடத்துவ வாழ்க்கை வாழ்ந்து நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் இறைவார்த்தையை மையமாகக் கொண்ட வாழ்வு வாழ வரம் வேண்டுகின்றோம். எங்கள் அன்றாட வாழ்வில் இறைவார்த்தையை வாசித்து அவ்வார்த்தை காட்டுகின்ற உண்மை வழியில் நாங்கள் வாழ வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. கனிவின் இறைவா, செல்வந்தர்கள், வசதிபடைத்தவர்கள் அனைவருக்காகவும் உமது அருளை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவரும் தங்களிடம் இருப்பதை ஏழை எளியவர்களோடும், தேவையிலிருப்போரோடும் பகிர்ந்து வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் இருபத்தொன்பதாம் ஞாயிறு

**எசா 53: 10-11 எபி 4:14-16 மாற் 10:35-45**

**திருப்பலி முன்னுரை**

கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, நிறைய செல்வம் கொண்டிருப்பதும், பதவியில் அமர்வதும், அதிகம்





படிப்பதும் மட்டுமே வசதியான, வளமையான வாழ்க்கை என்று நாம் நினைத்து அவற்றை அடைய ஓடி ஓடி உழைக்கின்றோம். தலைவர்களாக இருக்கவே ஆசைப்படுகின்றோம். தொண்டராக வாழ தயங்குகிறோம். யாரும் துன்பப்பட விரும்புவதில்லை. ஆனால் இன்றைய இறைவார்த்தை துன்பத்தின் வழியாகத்தான் இன்பம் எனவும், தலைவனாக இருக்க விரும்புபவன் தொண்டனாக இருக்க வேண்டும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்றும் போதிக்கின்றது. இயேசு இறைமகனாக இருந்தபோதும் தன்னை எப்பொழுதும் ஒரு ஊழியனாகவே அடையாளப்படுத்திக் கொண்டார். பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறி தன்னை தேடிவந்த மக்களுக்கும், தான் சென்ற இடங்களில் சந்தித்த மக்களுக்கும் எப்பொழுதுமே பணிவிடை புரிந்தார். இறுதியில் ஒரு இறை ஊழியனாக, பணியாளனாக தன்னுடைய உயிரையே கையளித்தார். தன்னைப்போல தன்னுடைய சீடர்களும் பணியாளர்களாகவே வாழவேண்டும் என்று ஆசை கொண்டார். அதனால்தான், “உங்களில் பெரியவராக இருக்க விரும்புவோர் தொண்டராய் இருக்கட்டும், முதன்மையானவராய் இருக்க விரும்புவோர் அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்” என்று கூறி தம் சீடர்களுக்கு சீடத்துவத்தைப் பற்றி கற்றுக்கொடுக்கின்றார். உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவைப் போல தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு அனைவருக்கும் பணி செய்து வாழ்கின்ற வாழ்க்கை என்பதை நாம் உணர்ந்து அதிகாரம் செலுத்தும் தலைவர்களாக இருக்க வேண்டும் என்ற ஆசையை விட்டுவிட்டு எளிய உள்ளத்தோடும், தாழ்ச்சி நிறைந்த மனத்தோடும் அனைவருக்கும் ஊழியம் செய்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.



**முதல் வாசக முன்னுரை**

இறை ஊழியர் என்பவர் மற்றவர்களுடைய நலனுக்காக பல துன்பங்களை தாங்கிக் கொள்வார். தன்னுடைய துன்பங்களால் மற்றவர்களுக்கு கிடைக்கும் நன்மையைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைவார். தம்முடைய தியாகத்தால் பலருக்கு புதுவாழ்வளிப்பார். இத்தகைய உண்மையான ஊழியரை கடவுள் பெருமைப்படுத்துவார். அவருக்கு சிறப்பான இடத்தை அளிப்பார் எனக் கூறும் இவ்வாசகத்திற்கு செவிகொடுத்து நாமும் இறை ஊழியார்களாக வாழ வரம் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நம்முடைய தலைமைக் குருவாகிய கிறிஸ்து நம்முடைய பலவீனத்தில் நமக்கு இரக்கம் காட்டுபவர். அவர் நம்மைப்போல சாதாரண மனிதனாக வாழ்ந்து எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டவர். ஆனால்



This PDF was created using Adolix PDF Converter Demo . Register to remove this watermark!